
மஹாமகமத்தின் பெருமையும்

அமைச்சர்

ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரின் திருப்பணிகளும்

மஹாமகக்குளம் [illegible]



ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடம்
காஞ்சீபுரம்.

புத்தகம் கிடைக்குமிடம்: பக்த ஸமாஜம்
மேலமாம்பலம், சென்னை-33.



RATHNAM PRESS, MADRAS-1

உ



மஹாமகதீர்த்தம்

கோவிந்த தீக்ஷிதர், ஷோடசலிங்க ப்ரதிஷ்டை

கும்பகோணக்ஷேத்ரம்.

(குடந்தை அல்லது குடமூக்கு.)

தாவிமுதற் காவிரிநல் யமுனைகங்கை
சரஸ்வதி பொற்றாமரைபுட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ்சூழ்ந்த
குடந்தைக் கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே.

—திருநாவுக்கரசர் (அப்பர் சுவாமிகள்
7-வது நூற்றாண்டு)

பூமருவும் கங்கைமுதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு வந்துவழி படுங்கோயில்

—சேக்கிழார் (பெரிய புராணம்)

குருவும் சந்திரனும் சிம்மராசியிலும், சூரியன் கும்பராசியிலும் வரும் பூர்ணிமை மகாமக புண்ய காலம்.

உலகத்தில் ஜலப்ரளயம் ஏற்பட்ட ஸமயத்தில் சிவபிரான் ஆணையின் பேரில் ஜலப்ரளயம் வடிந்த பிறகு

எல்லா ஜீவராசிகளேயும் படைப்பதற்காக ப்ரஹ்மா ஒரு கும்பத்தல் (குடத்தில்) 88 லக்ஷம் புல்பூண்டு முதலிய ஜீவ ராசிகளின் ஸூக்ஷ்ம பீஜ மூலங்கள் கலந்த அம்ருதத்தை நிரப்பி அதன்மேல் துளிர்கள், காய், கூர்ச்சம் முதலியவற் ருேடு பூர்ண கும்பமாக மேரு சிகரக்தில் வைத்தார். ஜல ப்ரளயம் வந்து அந்த சிகரத்தின் மேலும் பரவ, அப்போது அக் கும்பம் ஜலத்தில் மெள்ள மெள்ள மிதந்து வந்து ஜல ப்ரளயம் வடிந்தபிறகு, இப்போது கும்பகோணத்தில் கும்ப லிங்கமிருக்கும் ஆலய கர்ப்பக் க்ரகமிருக்கும் இடத்தில் வந்து தங்கியது. அதன் தேஜஸ் தேவர்கள் முதலிய யாவரையும் கூட கிட்ட அணுக விடவில்லை. எல்லோரும் இறைவனேப் பிரார்த்தனே செய்தனர். சிவபிரான் ஒரு வேடனுருவில் வந்து தூரத்தில் நின்று அக் கும்பத்தின்மேல் ஒரு பாணம் (அம்பு) போட்டார். அந்தக் கும்பத்தின் மூக்கு தனியே விண்டு விழுந்தது. அமிர்தம் பெருகிற்று. அதுவே மஹாமக தீர்த்தம். கும்பகோணத்திற்கு 'கும்பகோணம்' என்ற பெயரும், 'குடமூக்கு' என்ற பெயரும் இதனுல்தான் ஏற்பட் டது. குடமூக்கு குறுகி 'குடந்தை' ஆயிற்று.

இந்தக் கும்பத்தின் திருக்கோவிலில் சாலிவாஹன சகம் 1722 வருஷத்திய கல்வெட்டு ஒன்று செதுக்கப்பட்டிருக் கிறது.

"சாலிவாஹன சகாப்தம் (1722) துன்மதி வருஷம் கும்பேசுவர சுவாமி ஸோமாஸ்கந்த மூர்த்திக்கு கர்ப்பக் க்ரகம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம் மூடுன்னு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி சந்திரமௌளீச்வர தாஸபூத ஸ்ரீ மஹாதேவேந்திரயதி தர்மம்."

கும்பலிங்கம் கோவிலில் குருவின் சிலாஸாஸனம் இது.

இந்த மஹாமக தீர்த்தக் கரையைச் சுற்றிலும் 16 சிவலிங்க மண்டப விமானங்கள் உள்ளன.

இந்த 16 லிங்கங்களும் சோழ நாட்டில் 16-வது நூற்ருண்டில் மஹா மந்திரியாயிருந்த கர்ணுடக கோவிந்த தீக்ஷிதர் என்பவரால் அச்சுதேந்திர மஹாராஜா, ராஜ்யபாரம் செய்யும் காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அச்சுதா, அனந்த, கோவிந்தா என்று ஒரு மந்த்ரம் உண்டு. மஹா ராஜா அச்சுதன், மந்திரி கோவிந்தன், மஹாராஜா மஹிஷித் அதாவது பூபாலர், மந்திரி தீக்ஷதர், மஹாராஜர சஸ்த்திரங் களில் (ஆயுதங்களில்) வல்லவர். மந்திரி சாஸ்த்திரங்களில் நிபுணர். மஹாராஜா யுத்தங்களில் வல்லவர், மந்திரி யஜ்ஞானுஷ்டானங்களில் வல்லவர். இவ்விதம் அந்நாள் தொட்டு ஒரு பழமொழி ஸம்ஸ்கிருத ச்லோக வடிவமாக வழங்கி வருகிறது.

श्रीमानच्युतभूपालो गोविन्दो दीक्षितावुभौ ।
शस्त्रे शास्त्रे च कुशलौ युद्धेषु च हवेषु च ॥

அச்சுதேந்திர மஹாராஜன் புத்திரனை ரகுநாதேந்திர மஹாராஜா காலத்தில் ஒரே ஸிம்மாஸனத்தில் ஒரு பாதியில் கோவிந்த தீக்ஷிதர் வீற்றிருந்து ராஜ்யபாரம் செய்ததாக ஸாஹித்யரத்ஞகரம் என்னும் இலக்கிய நூலிலிருந்து தெரிகிறது.

[illegible]
[illegible]
प्रज्ञावैभववञ्चितप्रतिभ-
[illegible] यः ।
[illegible]
[illegible]
[illegible] नित्यम् [illegible] विजयते
गोविन्दयज्वाग्रणीः ॥

கும்பகோணத்தில் காவேரியின் தென் கரையில் ஒரு மறை பயிலும் கல்விச்சாலை ஏற்படுத்தப்பட்டு இன்றும் நடந்து வருகிறது. இப் பாடசாலைக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டு தற்பொழுது ஸ்ரீகாஞ்சீ காமகோடி ஆசார்யாளால் 1933 மஹாமகத்தின்போது திறந்துவைக்கப்பட்டது.

இப் பதினாறு சிவலிங்கங்களையும் ஸ்தாபித்து குளத்தைச் சுற்றி படித்துறையும் கட்டிவைத்தார். அந்த 16 லிங்கங்களின் திருநாமங்கள் :

1. ப்ரஹ்மதீர்த்தேசுவரர்	9. அகஸ்தீசுவரர்
2. முகுந்தேசுவரர்	10. வ்யாசேசுவரர்
3. தனேசுவரர்	11. உமைபாகேசுவரர்
4. வ்ருஷபேசுவரர்	12. நைர்ருதீசுவரர்
5. ப்ராணேசுவரர்	13. ப்ரஹ்மேசுவரர்
6. கோணேசுவரர்	14. கங்காதரேசுவரர்
7. பக்திகேசுவரர்	15. முக்ததீர்த்தேசுவரர்
8. பைரவேசுவரர்	16. க்ஷேத்ரபாலேசுவரர்

கோவிந்த தீக்ஷிதர் 16 லிங்க ஸ்தாபனம் செய்த விஷயமாக ஒரு சுலோகம் அச்சுப்போட்ட ஸ்தலபுராணத்தின் முடிவில் காணப்படுகிறது. அதாவது :—

கோவிந்ததீக்ஷிதோ நாம மஹான் ஆஸீத் கலௌ யுகே.
தேன ஷோடசலிங்கானி ஸ்தாபிதானி ஸரோவரே.

இந்த 16 மண்டபங்களில் வடகரையில் முதலாவதாயுள்ள ப்ரஹ்மதீர்த்தேசுவர மண்டபத்தில் துலாபார சித்ரம் ஒன்றுள்ளது. இதனால் இதற்கு துலாபார மண்டபம் என்று பெயர். இந்த மண்டபத்தில் அரசன் அச்யுதேந்த்ர மஹாராஜா ஒரு தட்டிலும், பொன்னை ஒரு தட்டிலும் நிறுவப்பட்டிருக்கிறது. கோவிந்த தீக்ஷிதர் பல தர்மங்களைச் செய்திருக்கிறார். சேக்கிழார் வழிபட்ட திருநாகேசுவரத்தில் சூர்ய தீர்த்தம்

முதலிய அனேக திருப்பணிகள் செய்திருக்கிருர். பாபஞசத் திற்கடுத்த திருப்பாத்துறையில் பூர்ணமான சிவாலயத் திருப் பணி செய்திருக்கிருர். அவருக்கு நாட்டில் "அய்யன்" என்று பெயர். அய்யன்குளம், அய்யன் தெரு, அய்யம் பேட்டை, அய்யன் கடைத் தெரு, அய்யன் வாய்க்கால் முதலியவைகள் இன்றும் அவர் பெயருக்குச் சின்னங்களாக நிற்கின்றன.

மஹாதானபுரம், திருவிடை மருதூர், மாயூரம், திரு வெண்காடு முதலிய ஊர்களிலுள்ள மஹாதானத் தெருக் களும், திருவையார், தஞ்சை வெண்ணுற்றங்கரை, திருவலஞ் சுழி, கும்பகோணம், திருவிடைமருதூர், மாயூரம் முதலிய இடங்களில் நதீ தீரத்திலிருக்கும் புஷ்ய மண்டபங்களும் இவர் கைங்கர்யங்களே. கும்பகோணத்தில் ராஜாபாட சாலைக்கடுத்த யாகசாலைத் தெரு, இவருடைய வேள்விச் சாலை. திருவிடைமருதூர் புஷ்யோத்ஸவ வெள்ளி ரதமும், வெள்ளி ரிஷபமும் இவருடைய கைங்கர்யமே.

மஹாமகக்குள வடகரையில் காசி விசுவநாத சுவாமி ஆலயமிருக்கிறது. அவ்வாலயத்தில் கங்கை, யமுனை, நர்மதை, ஸரஸ்வதி, காவேரி, கிருஷ்ணு, கோதாவரி, துங்க பத்ரா, ஸரயூ என்னும் 9 நதிகளும் கன்னிகைகள் சிலை உருவில் வரிசையாக இன்றும் மஹாமக தீர்த்தத்தை எதிர் நோக்கி நின்றுகொண்டு காட்சியளிக்கின்றனர். கல்யாணம் ஆன பெண்கள் வாழ்க்கை ஆரம்பிக்கு முன் இக்கன்னிகை கள் ஸன்னிதிக்கு வந்து இன்றும் பொங்கல் படைக்கின்றனர்.

மஹாமக குளத்துனுள் 19 தீர்த்தங்கள் கிணறு ரூபத்தி லிருக்கின்றன. அவைகளில் ஒன்று ப்ரஹ்ம தீர்த்தம், 9 நதி தீர்த்தங்கள், 8 திக்பால தீர்த்தங்கள், ஒன்று 66 கோடி தீர்த்தம்.

1. இந்த்ர தீர்த்தம்	10. கங்கை
2. அக்னி தீர்த்தம்	11. யமுனை
3. யம தீர்த்தம்	12. கோதாவரி
4. நிர்ருதி தீர்த்தம்	13. நர்மதை
5. வருண தீர்த்தம்	14. சரஸ்வதி
6. வாயு தீர்த்தம்	15. காவேரி
7. குபேர தீர்த்தம்	16. குமரி
8. ஈசான தீர்த்தம்	17. பயோஷ்ணீ
9. ப்ரஹ்ம தீர்த்தம்	18. ஸரயூ

19. 66 கோடி தீர்த்தம்.

கோவிந்த தீக்ஷிதர், 'ஸங்கீத ஸுதாநிதி' என்னும் ஸங்கீத க்ரந்தம் செய்திருப்பதாகத் தெரிகிறது. அப்பய்ய தீக்ஷிதர் வேதாந்த தேசிகரின் யாதவாப்யுதயத்திற்கு தான் எழுதியிருக்கும் வ்யாக்யானத்தில் இதிலிருந்து மேற்கோள் கொடுத்திருக்கிறார். இதைத் தவிர அவர் ஒரு ஜோஸ்ய க்ரந்தமும், ராமாயணத்தில் ஸுந்தர காண்டத்திற்கு ஒரு வ்யாக்யானமும் செய்திருப்பதாகத் தெரிகிறது.

அவர் அத்வைத சாஸ்திரத்தில் கரைகண்டவர். அவருடைய புத்ரர்களுள் ஒருவரான 'யஜ்ஞ நாராயண தீக்ஷிதர்' தானியற்றிய 'ஸாஹித்ய ரத்னாகரம்' என்னும் நூலில் தன் தகப்பனாரைப் பற்றிச் சொல்லும்போது "அத்வைத வித்யா விபவாவலம்பர்" என்கிறார். அவருடைய மற்றொரு புத்திரரான "வேங்கடமகி" என்பவர் 'சதுர்தண்டி ப்ரகாசிகா' என்னும் தானியற்றிய ஸங்கீத நூலில் அவரைப் பற்றிச் சொல்லும்போது "அத்வைத வித்யாசார்ய ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ர:" என்றும், 'சங்கர முனி மத ப்ரதிஷ்டாபன கோவித:' என்றும் கூறுகிறார். ப்ரஸித்தி பெற்ற ரத்னகேட தீக்ஷிதரின் புத்ரரும், "தந்த்ர சிகாமணி" என்னும் மீமாம்ஸா

க்ரந்த கர்த்தாவுமான, ராஜ சூடாமணி தீக்ஷிதரும், தீக்ஷித ரைப் பற்றி சொல்லும்பொழுது ' அத்வைத வித்யாசார்ய: ' என்றே கூறுகிறுர். ஆகையினுல், கர்ஞடகரான கோவிந்த தீக்ஷிதர் ஆதி சங்கரருடைய அத்வைத வேதாந்த ஸித்தாந் தத்தில் நல்ல அனுபவத்துடன் அந்த ஸித்தாந்தத்தை புன: பிரதிஷ்டை செய்துள்ளார் என்று தெரிகிறது.

கோவிந்த தீக்ஷிதரின் புத்திரர்களில் ஒருவரான யஜ்ஞ நாராயண தீக்ஷிதர் "ஸாஹித்ய ரத்ஞகரம்" என்று ஒரு காவியமும், "ரகுநாத விலாஸம்" என்னும் நாடமும் எழுதி யிருக்கிறுர். அவருடைய புத்திரர் வேங்கடேச்வர தீக்ஷிதர் என்பவர் "ஜாதக சந்த்ரிகை" என்னும் ஜோஸ்ய க்ரந்தம் எழுதி யிருக்கிறுர். ராஜசூடாமணி தீக்ஷிதரின் குருவும், ஜானகீ பரிணய நாடகம் முதலிய அநேக க்ரந்தங்களின் கர்த்தாவுமான ராமபத்ர தீக்ஷிதரின் மாமனுர் சொக்கனுதமகி என்பவர் தான் எழுதிய பாதஞ்சலி மஹாபாஷ்ய உரையான பாஷ்ய ரத்ஞவளி என்ற க்ரந்தத்தில் தான் அந்த க்ரந்தம் வேங்கடேச்வர தீக்ஷிதரின் தூண்டுதலின் பேரில் எழுதின தாகச் சொல்லுகிறுர்.

கோவிந்த தீக்ஷிதரின் மற்ெருரு புத்திரரான வேங்க டேச்வர தீக்ஷிதர் என்று கூறப்படும் வேங்கடமகி "சதுர் தண்டி ப்ரகாசிகா" என்னும் ஸங்கீத க்ரந்தமும், "வார்த்திகா பரணம்" என்னும் பாட்ட வார்திக டுப்டீகா வ்யாக்யானமும், "ஸாஹித்திய ஸாம்ராஜ்யம்", "சுல்பமீமாம்ஸை", "கர்மாந்த வார்த்திகம்" முதலிய க்ரந்தங்களேயும் எழுதி யிருக்கிறுர். தற்காலம் ஸங்கீத க்ரந்தங்களில் முக்கியமாக வழங்கும் 72 மேள கர்த்தாக்கள் இவரால் ஏற்படுத்தப் பட்டவை என்று சொல்லப்படுகின்றன. எட்டயபுரம் ஜமீனுல் வெளியிடப்பட்ட "ஸங்கீத ஸத்ஸம்ப்ரதாய ப்ரதர்சினீ" என்னும் புஸ்தகத்தில் அவரால் இயற்றப்பட்ட ஸங்கீத

க்ருதிகள் வெளிவந்திருக்கின்றன. மதுரையில் மந்திரியாக இருந்தவரும், அப்பய்ய தீக்ஷிதரின் தம்பி பேரனுமான நீலகண்டதீக்ஷிதர் தான் இயற்றிய "கங்காவதரணம்" என்னும் நூலில்,

[illegible] ।
[illegible] ॥

என்னும் ச்லோகத்தில் தன்னை வேங்கட மகிசிஷ்யர் என்று சொல்லிக்கொள்கிறார். ராஜசூடாமணி தீக்ஷிதரும் தான் எழுதிய "தந்த்ரசூடாமணி" என்னும் க்ரந்தத்தில் தன்னை வேங்கடமகியின் சிஷ்யராகச் சொல்லிக் கொள்கிறார்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible]

[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

கோவிந்த தீக்ஷிதர் தஞ்சாவூர் ராஜாவுக்கு மந்திரியாக இருந்தபோது பட்டீச்வரத்தில் வஸித்துக்கொண்டு தினந்

தோறும் குதிரையின்மீது தஞ்சைக்கு போய்வந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் தீக்ஷிதர் அரண்மனையில் வைச்வதேவம் செய்யும் ஸமயம் தீக்ஷிதருக்கு தர்ம கார்யங்களில் வலக்கையாக விளங்கி வந்து, அதற்கு இரண்டு வருஷங்களுக்குமுன் காலமான ஒரு பறையன் வந்து வெளியில் நின்றுகொண்டு அவரை கூப்பிடுவதாக வீட்டிலுள்ளவர்கள் சொன்னார்கள். இப்போது கர்ம காலம். ஆகையால் இரண்டு நாழிகை கழித்து வரச்சொல் என்று சொல்லி யனுப்பினர் தீக்ஷிதர். "4 நாழிகைக்குள் வரவேண்டும்" என்று அவன் தீர்மான மாகச் சொன்னான். "என்னவோ முக்கிய விஷய மென்று நிச்சயித்து தீக்ஷிதர் சரி என்று அங்கீகரித்தார். அவனை உயிருடன் பார்த்ததும் தீக்ஷிதருக்கு ஆச்சரிய மேற்பட்டது. அவன் அவரை வெளியில் தனிமையில் கூப்பிட்டு சொல்ல ஆரம்பித்தான். "நான் சொல்லப்போவது தேவரஹஸ்யம். நான் தங்களுடைய தார்மிக கார்யங்களுக்கு ஒத்தாசையா யிருந்த புண்யத்தினல் யமதர்மராஜனின் கிங்கரனாக இருக்கிறேன். எனக்கு எந்த ரூபத்தையும் எடுத்துக்கொள்ளும் சக்தி உண்டு. தங்களுக்கு தெரிவதற்காக பழைய ரூபத்தை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். விஷயம் யாதெனில் :—

நேற்று யமனுடைய ஸபையில் புண்யம் அதிகம் செய்தவர்களைப் பற்றிய சர்ச்சை எழுந்தது. அப்போது பெரும்பான்மையோர் தங்களைப் பற்றியே (கோவிந்த தீக்ஷிதரைப் பற்றி) உயர்வாகக் குறிப்பிட்டார்கள். உடனே தர்மராஜன் சித்ரகுப்தனிடம் "தீக்ஷிதர் எல்லா தானதர்மங்களையும் செய்திருக்கிருரோ என்று நன்ருக கணக்கைப் பார்த்து சொல்" என்ருன். சித்ரகுப்தன் கணக்கைப் பார்த்துச் விட்டு "இவருக்கு நந்தவனமேற்படுத்தும் தர்மம் பாக்கி" என்ருன். இதைக் கேட்டுக்கொண்டிருந்த நான் தங்களிடம்

இதை தெரிவித்து விடவேண்டுமென்று உடனே கிளம்பி வந்தேன் என்றான்.

தீக்ஷிதர்—நீ சொல்பவற்றை எவ்விதம் நம்புவது? இதை தெரிவிப்பதற்காக நீ இங்கு வருவதை யமன் எப்படி அனுமதித்தான்.

யமகிங்கரன்—நான் இங்கு யமதர்மராஜனின் ஆஜ்ஞைப்படி வேறு கார்யமாகவும் வந்திருக்கிறேன். அதை தாங்கள் கவனித்தாலேயே என் பேச்சில் நம்பிக்கை யேற்படும்.

தீக்ஷிதர்—அது என்ன?

யமகிங்கரன்—இங்கு தங்களால் கட்டுவிக்கப்படும் ஆலய தெற்கு கோபுரதள வேலையின் முக்ய ஸ்தபதியின் உயிரை எடுத்துப் போவதற்காக வந்திருக்கிறேன்.

தீக்ஷிதர்—எப்போது அவனுடைய உயிரை அபஹரிப்பாய்?

யமகிங்கரன்—சரியாக மாலை 4½ மணிக்கு.

தீக்ஷிதர்—எப்படி அபஹரிப்பாய்?

யமகிங்கரன்—கோபுரத்தின்மேல் கல்லை ஏற்றுவதற்காக எல்லோரும் தூக்கிக்கொண்டு போகும்போது அவன் கோபுரத்திலிருந்து விழுந்து காலமாவான்.

இவ்விதம் சொல்லி அவன் மறைந்தான்.

தீக்ஷிதர்—இந்த ஸ்தபதியில்லாவிட்டால் கோபுரவேலை நன்கு பூர்த்தி யடையாது. இவனுக்கு ஸமமானவன் வேறில்லை. ஆகையால் இவனை காப்பாற்றுவது நம் கடமை என்று ஆலோசித்து, அந்த ஸ்தபதியை உடனே அவஸர

மாய் கூப்பிட்டு வரச்செய்து அவனை தன் அரண்மனையில் ஒரு அறையில் பூட்டி சாவியை தன்னிடமே ஜாக்ரதையாக வைத்துக்கொண்டார். ஒருவருக்கும் காரணம் விளங்க வில்லை. இவரைக் கேட்கவும் தைரியமில்லை. ஸ்தபதியும் "நான் ஏதோ தவறு செய்திருப்பேன். அதற்காகத்தான் இவ்விதம் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது" என்று எண்ணிக்கொண்டான். 4½ மணி சுமாருக்கு அவருடைய மற்ற கார்யஸ்தர்கள் அவஸரமாக ஓடோடி வந்தனர். தீக்ஷிதர் என்ன விஷயம் என்று விசாரித்தார். கார்யஸ்தர்கள் "ப்ரதான ஸ்தபதி கோபுரத்திலிருந்து விழுந்து காலமானுன்" என்றனர். தீக்ஷிதர் அவன் என் அரண்மனையில் அறையில் பூட்டப்பட்டு சாவி இதோ இருக்கிறதே' இதை எவ்விதம் நம்புவது" என்றார்.

கார்யஸ்தர்கள்—தாங்கள் பூட்டியிருந்தது உண்மை. பிறகு மற்ற ஸ்தபதிகள் ஒல்லோரும் வந்து ப்ரதான ஸ்தபதி ஸமீபத்தில் இருந்தால் தான் அந்த கல்லை ஏற்ற முடியும். அதை ஏற்றும் வரையில் அவனை எங்களுடன் இருக்க அனுமதிக்க வேண்டும் என்று தங்களிடம் ப்ரார்த்தித்தனரே. தாங்கள் அப்படியே என்று சாவியை எங்களிடம் இப்போது தான் பத்து நிமிஷங்களுக்கு முன் கொடுத்தீர்கள். நாங்கள் அவனை விடுவித்து பழையபடியே அறையை பூட்டி தங்களிடம் சாவியை ஒப்படைத்தோமே என்றனர். தீக்ஷிதருக்கு ஆச்சரியமாயிருந்தது. ஏனெனில் விதியின் பலத்தினுல் அவருக்கு அவனை பூட்டிவைத்திருந்ததின் காரணம் பத்து நிமிஷம் மறந்து போய்விட்டது.

இந்த ஸம்பவத்தினுல் யமகிங்கரன் தன்னைப்பற்றி குறிப்பிட்டது உண்மை என்று கண்டு கொண்டார். உடனே தன் அரண்மனைகளை யெல்லாம் நந்தவனத் தோட்டமாக மாற்றி

விட்டார். இப்போதும் அந்த இடங்களுக்கு அரண்மனைத் தோட்டம் என்று பெயர் வழங்கி வருகிறது.

பட்டீச்வரத்தை யடுத்த கோவிந்தகுடி கிராமமும், திருவிடை மருதூரை அடுத்த கோவிந்தபுரமும் இவருடைய தர்மங்களில் சேர்ந்தவை.

கோவிந்த தீக்ஷிதருடைய பெண் வம்சத்துப் பேரன் அய்யவார்மகி என்னும் மஹான் அநேக வேள்விகளை முடித்து ஐந்து அக்ரஹாரப் பிரதிஷ்டைகளும் செய்திருக்கிருர். அய்யவார் மஹியுடைய தப்பியான திருமலைமகியும், புத்திரரான லக்ஷ்மிபதியும், ஸஹோதரி புத்திரரான வாஞ்சேச்வரர் என்னும் குட்டி கவியும், மஹாபண்டிதர்களாக விளங்கினர்களென்று தெரிகிறது.

சாலிவாஹன சகம், **1642**-க்கு சரியான **1720 A. D.** விகாரி வருஷத்தில் காஞ்சிபுரத்தில் ஸ்ரீமடத்திலிருந்து சோழநாட்டு அக்ரஹாரங்களில் ஆசார்ய ஸம்பாவனை, தீபாராதனை காணிக்கைகள் வசூல் செய்வதற்காக அனுப்பப்பட்ட ஸ்ரீஅகோபில பண்டிதரிடம் மேற்படி காணிக்கைகளுடன் ஒவ்வொரு அக்ரஹாரத்தார்களும் ச்லோக ரூபமாகவும், வசனரூபமாகவும் ஸமர்ப்பித்த விண்ணப்பங்களில், அப்போது புதிதாக ஏற்பட்ட ஸர்வமான்ய அக்ரஹாரமான திருவிசை நல்லூர் பண்டிதர்களின் விஜ்ஞாபனங்களில் இம்மூவரைப்பற்றி இரண்டு ச்லோகங்கள் காணப்படுகின்றன.

𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌿𑌕𑍀𑌮𑌶𑍇𑌷𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌂
𑌵𑌂𑌶𑌾𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑌾𑌤𑍍𑌤𑌨𑌾
𑌯𑌸𑍍𑌯𑍈𑌵𑌕𑍃𑌷𑍍𑌣𑌕𑌵𑍇𑌶𑌕𑌨𑍍𑌯𑌯𑌜
𑌜𑍍𑌞𑍈𑌤𑍍𑌰𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌹𑌾𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ।

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ||

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

மற்றும், அந்த அக்ரஹாரத்தில் அக்காலத்தில் வஸித்துவந்த மஹாஞானியும், மஹாபக்தரும், கங்கைபொங்கும் உத்ஸவம் நடைபெறும் மஹிமையுடைய 'அய்யாவாள்' என்று சொல்லப்படும் ஸ்ரீதரவெங்கடேசருடையவும், காசி மஹாமஹோபாத்யாய லக்ஷ்மண் சாஸ்திரிகள், பண்டித ராஜராஜேஸ்வர சாஸ்திரிகள் இவர்களின் பூர்வ புருஷர்களான ராகவ தீக்ஷிதர் முதலிய மஹான்களின் பெயர்களும் காணப்படுகின்றன.

கோவிந்த தீக்ஷிதருடைய தௌஹித்ரியின் புத்ரனுன 'குட்டிகவி' என்னும் வாஞ்சேச்வரகவி எல்லாப் புனித நூல்கள், ஸ்தலங்கள், தெய்வங்கள் இவர்களின் ஆசீர்வாத ரூபமான ஆசீர்வாத சதகமும், அரசியல் சீர்திருத்த ப்ரதானமானதும் சிலேடைக் காவியமுமான மகிஷசதகமும், ஸ்ரீரங்க பரிமேலழகர் உத்ஸவத்தைப் பற்றி தாடீசதகமும் இயற்றி யிருக்கிருர். இக்குட்டி கவியின் தமயனுர் ராமகவி என்பவர் ஜெயதேவர் கிருஷ்ணஷ்டபதி செய்திருப்பதைப் போல உயர்ந்த கவிதையின் மூலம் ராமாஷ்டபதி இயற்றி யிருக்கிருர். குட்டிகவியின் பேரனின் புத்திரனுன குட்டி சாஸ்திரிகள் திருவிடைமருதூர் அமரஸிம்ஹன் ராஜ சபையிலும், தஞ்சை சரபோஜி மன்னர் ராஜ சபையிலும்,

புனா பேஷ்வாவின் ராஜசபையிலும், மைஸூர் கிருஷ்ணராஜ மஹாராஜா சபையிலும் ஆஸ்தான வித்வானாக விளங்கி ப்ரஹ்மஸூத்ரார்த்த சிந்தாமணி, மீமாம்ஸா பாட்டசிந்தாமணி, தத்தசிந்தாமணி, ச்ரார்த்தசிந்தாமணி, ஹிரண்யகேசிய ஸூத்ர உரை முதலிய அநேக சாஸ்த்ர நூல்களையும் இயற்றி நித்யாக்னிஹோத்ரத்துடன், சிவபூஜா துரந்தரராகவும் விளங்கி வந்தார். தமது பிரபிதாமஹரான குட்டிகவி இயற்றிய சிலேடை அரசியல் காப்பியமாகிய மஹிஷசதகத்திற்கு ஒரு விரிவான உரையும் இயற்றியுள்ளார்; குட்டி சாஸ்திரிகளுடைய தௌஹித்திரனும் (பெண் வயிற்றுப் பேரர்) சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி முதல்வவராகப் பணியாற்றியவருமான மஹாமஹோபாத்யாய மீமாம்ஸாரத்நம் வேங்கடஸுப்பா சாஸ்திரிகள் தற்போது ஸ்ரீகாமகோடி பீடத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீசந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு 1912, 13 வருஷங்களில் சாஸ்திரபாடம் சொல்லும் பணிகளை ஏற்று தான் கற்ற வித்தையைப் பயன்படுத்தியிருந்தார்.

ராமாஷ்டபதி யியற்றிய ராமகவியும், குட்டி சாஸ்திரிகளும் தமது நூல்களில் தாம் கர்னாடக ஹோஸல வம்சத்தில் தோன்றியதாக குறித்துள்ளார்கள். அந்த வம்சம் ஹோசள நாடு வம்சம் என்பதின் திரிவு. ஹோசள நாடு என்பது கிருஷ்ணபரமாத்மாவின் துவாரகை, ஸமுத்திரத்தில் மூழ்கிய பின் எஞ்சிய யாதவ வம்சத்தினர் கர்னாடக தேசத்தில் துவார சமுத்திரம் என்னும் நகரத்தை தலைநகராகக்கொண்டு வாழ்ந்த நாடு. மைசூர் ராஜ்யத்தில் "கர்னாடகர்கள்" என்ற தனிச் சொல்லால் வழங்கப்படும் அந்தணர்கள் அந்த ஹோசளநாட்டு அந்தணர்களே. மேற்படி ஹோசள ராஜ்ஜியம் உலகிலேயே தனக்கு ஈடு இல்லாத சிற்பங்களைப் பெற்று இன்றும் அப் புகழுடன் விளங்குகின்றது. 13-வது நூற்றாண்டில் அந்த ஹோசள ராஜ்யம் திருச்சிக்கு வடக்கில்

பெரிய மாரியம்மன் க்ஷேத்ரமாகிய சமயபுரத்தை யடுத்துள்ள விக்ரமபுரமென்னும் கண்ணனூர் வரை பரவியிருந்தது. ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் இக்கோவில்களின் பெரும் பகுதிகள் இந்த ஹோசள மன்னர்களால் கட்டப்பட்டவைகள் தான். துவார சமுத்திரத்திலுள்ள (ஹளேபீடு) ஆலயத்தில் விளங்கும் ஹொய்சளேச்வரரைப் போல, இந்த விக்ரம புரத்திலும் ஹொய்சளேசர் ஒரு ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார். அவருக்குத் தமிழ் கல்வெட்டுகளில் "போச்சலேசுவரர்" என்னும் பெயர் காணப்படுகிறது. மஹாராஷ்ட்ர மன்னர்களுடைய குலப்பெயரான 'போசல' என்னும் பதத்திற்கும், இந்த ஈச்வரனுடைய பெயருக்கும் ஒருவிதமான ஒற்றுமை காணப்படுகிறது. விக்ரமபுரத்தில் அக்காலத்தில் ராஜ்யபாரம்செய்த வீரஸோமேச்வர மன்னன், வீரராமநாத மன்னன் இவர்களுக்கு 'சோழராஜ ப்ரதிஷ்டாப ஞசார்ய' என்ற பட்டப்பெயரும் வழங்கியதாகத் தெரிகிறது. தஞ்சையில் அக்கால சோழ மன்னர்களுக்கு ஸோமேச்வர மன்னன் மாமன் முறையாகவும், சோழராஜ்யத்திற்கு அக் காலத்தில் ஏற்பட்ட இடர்களையெல்லாம் அவன் தீர்த்த தாகவும் கல்வெட்டுக்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹொய்சள ராஜ்யத்திற்குப் பின், பிற நாட்டவர்களிட மிருந்து நமது ஸமயத்தை காப்பாற்ற உருவான விஜயநகர ராஜ்யத்திற்கு ஒரு பெரும் தூணாயிருந்து உதவிய வித்யாரண்ய ஸ்வாமிகளும் பூர்வாசிரமத்தில் மாதவன் என்ற பெயருடன், தன் உடன்பிறந்தவரான ஸாயணருடன் சேர்ந்து ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்னும் நான்மறைகளுக்கு விரிவான பாஷ்யம் இயற்றியுள்ளார். மற்றும் அரசியல், ஸமயம், ஜோதிடம், ஆசாரம், இலக்கியம் முதலிய பிரிவு களில் எண்ணிறந்த முதல் நூல்களையும், உரை நூல்களையும் இயற்றியுள்ளார். அவருடைய தாயின் பெயர் ஸ்ரீமதி என்று

அவருடைய வேதபாஷ்யத்திலிருந்து தெரிகிறது. அவர் ஸூத்ரம் போதாயன ஸூத்திரம். அவர் கர்னாடகதேசத்தின் ஒரு ரத்நம் என்று பொருள்படும்படி "கன்னடுக குலகே ரன்னட கன்னடி" என்று (South Indian Inscriptions Vol- IV, No. 267) ஸௌத் இன்டியன் இன்ஸ்க்ரிப்ஷன், பாகம் 4, நிர். 267) என்னும் கன்னட கல்வெட்டிலிருந்து கிடைக்கிறது.

கன்னட மொழியைக் கொண்ட மறையவர்களில் போதாயன ஸூத்திரம், ஹொய்சள கர்னாடகர்களிடையே காணப்படுகிறது. ஆனால், இத்தகைய மஹிமையுடைய மாதவராம் வித்யாரண்யர் நமது தமிழ்நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவராக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இன்றும் பழவநாடாகிய திருத்தவத்துறை எனப்படும் லால்குடியைச் சுற்றி சமயபுரம், கண்ணனூர் வரையுள்ள பிரதேசங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஸ்ரீமதி என்னும் பெயர் விசேஷமாக நாமகரணம் செய்யப்பட்டு வருகிறது. திருத்தவத்துறையில் கோயில் கொண்டிருக்கும் அம்பிகைக்கு "ப்ரவ்ருத்த ஸ்ரீமதி" அல்லது "பெருந்திரு" என்று திருநாமம். 'திரு' என்னும் லக்ஷ்மி அம்பிகையைக் குறித்துத் தவமியற்றிய வடகாவிரியின் துறை என்பது திருத்தவத்துறை என்னும் சொல்லின் பொருள். மஹாலக்ஷ்மி இத்தலத்தில் தவஞ் செய்தபோது அம்பிகை மஹாலக்ஷ்மிக்கு வரம் தந்து வளர்த்தமையால் அம்பிகைக்கு 'ப்ரவ்ருத்த ஸ்ரீமதி' என்னும் பெயர் வந்திருக்கிறது. திருத்தவத்துறைக்கும், ஹோசள நகரான விக்ரமபுரமென்னும் கண்ணனூருக்கும் சுமாராக ஒரு காததூரமே இருக்கும். ஆகையால், ஹோசள கர்னாடகரான வித்யாரண்யர்களின் முன்னோர்கள் ஹோசள ராஜ்யம் சோழநாட்டிற்கு வந்தபோதே குடியேறியிருக்கவேண்டும். மற்றும் பழவநாட்டு அந்தணர்

களுக்கு தலை கிராமமான மாங்குடி எனும் ஊருக்கு வித்யாரண்யபுரம் என்றும், அவ்வூர் சிவாலயம் வித்யாரண்யரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்றும் அவ்வூரார்கள் பாரம்பர்யமாய் சொல்லி வருகிறார்கள். திருத்தவத்துறைக்கும், திருச்சிக்குமிடையில் வடகாவிரியின் வடகரையிலுள்ள திருமணமேடு என்னும் ஒரு சிற்றூரில் கோவிந்த தீக்ஷிதரின் மரபில் வந்தவர்கள் சென்ற நூற்றாண்டில் வஸித்து வந்தார்கள். திருவானைக்காவலில் 1848-ல் தாடங்கப்பிரதிஷ்டை செய்தவரும் 1890-ல் ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி ஆலய புனருத்தாரணம் செய்தவரும், மந்த்ர மூர்த்தியாக விளங்கியவரும், தஞ்சை சிவாஜி மன்னரால் கனகாபிஷேகம் செய்யப்பட்டவருமான காமகோடி பீடத்தில் எழுந்தருளியிருந்த ஆசார்ய ஸ்வாமிகளும் பூர்வாசிரமத்தில் கோவிந்த தீக்ஷிதர் மரபில் வந்தவரே.

பரசுராமர் ஸமுத்திரத்தினின்று நிலமாக்கிய கேரளத்தில் அண்டை நாடுகளினின்று குடியேற்றிய அந்தணர்களில் 'மனை' அல்லது 'மனைக்கல்' என்ற சிறப்புப் பெயருடைய குடும்பங்கள் கர்னாடக அந்தணர்களின் குடும்பங்களென்று அந்நாட்டில் ஒரு வழக்கு வழங்கி வருகின்றது. கேரளத்தில் ஆதிசங்கரருடைய பந்துக்களுடைய வம்சம் வாழுமிடங்களுக்கு 'மனை' அல்லது 'மனைக்கல்' என்ற பெயரே வழங்கிவருகிறது. ஆனால், ஆதிசங்கரரின் பிதாவான 'சிவகுரு' என்ற அபூர்வப் பெயரைப் பார்த்தால் அவருடைய குடும்பம் மஹாமகம் நடக்கும் கும்பகோணத்திற்கடுத்த சிவகுருநாத ஆலயம் கொண்ட சிவபுரத்தினின்று கேரளத்திற்குச் சென்று அமர்ந்ததோ என்று ஊஹிக்கக் கூடியதாக இருக்கிறது. கும்பகோணக்ஷேத்திரத்தைச் சுற்றி பாத்திரம் வழங்கி வரும் 'சிவகுரு' என்னும் பெயரையும், வீட்டிற்கு 'மனை' என்னும் பெயரையும் ஒன்று நோக்கிப் பார்த்தால் ஸ்ரீஆதி

சங்கராசார்ய பகவத் பாதாள் குடும்பமும் அம்ருதகும்ப மஹாமகக்ஷேத்ரமான கும்பகோணத்தைச் சேர்ந்த கர்ணடக குலமோ என்றும் ஒரு தோற்றம் உண்டாகிறது. மற்றும் கேரளத்திலுள்ள திருச்சூருக்கு திருச்சிவபுரமென்னும் அந் நாட்டு ஸ்தலமாஹாத்ம்யங்களில் பெயர் வழங்கிவருகிறது. துவார ஸமுத்ரத்திலுள்ள ஹோஸளேச்வரர் தமிழ் நாட்டு விக்ரமபுரத்தில் கோவில்கொண்டதுபோல கும்பகோண க்ஷேத்திரத்தையடுத்த சிவபுரக்ஷேத்ரமும், கேரளத்தில் திருச்சிவபுரமாக ஆவிர்பவித்ததோ ! மற்றும் மாதவராம் வித்யாரண்யரின் குருவுக்கு வித்யாதீர்த்தர் என்று பெயர். அந்த வித்யாதீர்த்தர் பில்வாரண்யத்தில் பிறந்த சாரங்க பாணி என்னும் மஹான் என்று வித்யாரண்ய ஸ்வாமிகள் அவருடைய ஸர்வதர்சன ஸங்க்ரஹம் என்னும் ஸர்வ ஸமய நூலில் கூறியுள்ளார். சாரங்கபாணி என்னும் பெயரும், சிவகுரு என்னும் பெயரைப்போல் கும்பகோண க்ஷேத்திரத் தைச் சுற்றியே இன்றும் காணப்படுகிறது. பில்வாரண்யம் என்பது கும்பகோணத்தை யடுத்த ஸ்வாமி மலைக்குத் தெற்கே சிவராத்ரி க்ஷேத்ரமாகிய திருவைகாவூர் என்று புராணம் கூறுகிறது. இன்றும் அங்ஙனமே வழங்கி வருகிறது.

இங்ஙனம் ஆதிமுதலே இறைவனிடம் பக்தி, ஆத்ம தத்வ ஞானம். தர்ம மார்க்க ஸ்தாபனம், தர்ம மார்க்க அனுஷ்டானம், அரசியலையும், தர்ம ப்ரதிஷ்டையும் ஒருங்கே ஸ்தாபித்து ஆபத்தினின்றும் மக்களை ரக்ஷித்தல் எல்லாக் கலைகளையும், பணிகளையும் வளர்த்தல் முதலிய ஸர்வதோ முகமான நன்னெறிகளில் "நம் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அருள்வாக்கை மேற்கொண்ட அத்வைதாசார்ய கர்ணடக, ஸ்மார்த்த அந்தணர்களில் வஸிஷ்ட குலத்தி லுதித்த கோவிந்த தீக்ஷிதருக்கு இம்மஹாமக குளத்தைப் பணிசெய்யும் பாக்கியம் கிடைத்தது. இவ்விதம் பாக்கியம்

பெற்ற அடியார்களை புண்ய காலத்தில் நாம் நினைவில் வைத்துக்கொள்வது நன்றியறிதலாகும். தீக்ஷிதர் அவர்களும் அவருடைய வாழ்க்கைத் துணைவியான நாகாம்பிகையும் பட்டீச்வரத்தில் அம்பிகையின் ஆலயத்தில் கைகூப்பி புருஷப்ரமாண சிலைவடிவில் விளங்குகின்றனர். குடமூக்கில் ஆதிகும்பேச்வர ப்ராகாரத்தில் இவ்விருவரும் சிவலிங்க வடிவமாகவும், அம்பிகை வடிவமாகவும் விளங்குகின்றனர். திருவையாற்றிலும் அப்படியே சிவலிங்க வடிவமாகவும் அம்பிகை வடிவமாகவும் விளங்குகின்றனர்.

" பங்கயத்து மேலயனும் பரவிக்காணுக்
குடமூக்கே குடமூக்கே யென்பீராகிற்
கொடுவினைகள் தீர்ந்தாளைக் குறுகலாமே "



தெய்விக வேண்டுகோள்.

ஒவ்வொரு நாளும் பகல் உச்சி காலத்தில் நாம் எங்கிருந்தாலும் இந்த திருநாவுக்கரசு சுவாமிகளின் அருள்வாக்கை மனதில் ஸ்மரித்துக் கொள்ளலாம் என்பது ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கார சார்ய ஸ்வாமிகளின் கருத்து. இவ்விதம் ஸ்மரித்துக் கொள் பவர்கள் சௌகர்யப்பட்டால் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கு தெரிவித்துக்கொள்ளலாம்.

ரத்தினம் (கிளை) அச்சகம், சென்னை-1.